சுருக்கம்

திட்டம் மற்றும் வளர்ச்சி – திருவண்ணாமலை மாவட்ட தலைமை மருத்துவமனை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையாக மாற்றப்பட்டதை முன்னிட்டு செய்யாறு அரசு மருத்துவமனையை திருவண்ணாமலை மாவட்டத் தலைமை மருத்துவமனையாக மாற்றி ஆணை வெளியிடப்பட்டது – மருத்துவமனைக் கண்காணிப்பாளர் பதவி – திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(எப்–1) துறை

அரசாணை (நிலை) எண்.343

நாள்: 28.09.2017
ஹேவிளம்பி, புரட்டாசி – 12
திருவள்ளுவர் ஆண்டு, 2048

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.301, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எப்1) துறை, நாள். 30.10.2012.
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்களின் கடித எண்.5272/தி(ம)வ/ 02.03.2011, நாள் 07.10.2015 மற்றும் 07.09.2016.

*****

ஆணை:

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு கீழ்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

திருத்தம்

அரசாணை (நிலை) எண். 301. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(எப்1) துறை, நாள். 30.10.2012–ல் பத்தி 5–ல் அரசு ஆணை (டி) எண்.701, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள். 21.06.2011–ல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட இம்மருத்துவமனையிலுள்ள ஒரு முதுநிலை குடிமை மருத்துவர் தற்காலிகப் பணியிடத்தை மருத்துவமனை கண்காணிப்பாளர் பணியிடமாக மாற்றியும் அரசு ஆணையிடுகிறது என்பதற்கு பதிலாக அரசு ஆணை (டி) எண்.701, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.21.06.2011–ல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட தலைமைக் குடிமை மருத்துவர் பணியிடத்தை மேற்கண்ட மருத்துவமனைக்கு மருத்துவ கண்காணிப்பாளர் பணியிடமாக மாற்றியும் அரசு ஆணையிடுகிறது என்று படிக்கவும்.

2. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.47757/சுகாதாரம்–II/2017, நாள் 26.09.2017–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சென்னை– 6.
மாநில கணக்காயர் (கணக்கு (ம) வருவாய்) / (தணிக்கை), சென்னை–18.

மாவட்டக் கருவூல அலுவலர், திருவண்ணாமலை.

நகல்:
நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம்) அலுவலகம், சென்னை–9.
நிதித் (சுகாதாரம் – II) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்(டேட்டா செல் / ஏ / ஜே) துறை, சென்னை – 9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/10/17

பிரிவு அலுவலர்.

4/10/17